# DEPOSITION OF WITNESS

(.Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

Calendar C.**C.No. 75/2015**

Deposition of witness for
Prosecution அ.சா. 2
Defence
Court

Name : திருமதி. கவிதா
Father's Name : திரு. மனோகரன்
Village :
Taluk
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24-11-2021.**

**முதல் விசாரணை -**

நான் தற்போது 519, மசூதி தெரு, சோழவரம் வசிக்கிறேன்.. கடந்த என் மகளுக்கு 2019ம் ஆண்டு சக்திபிரனவ் என்பவருடன் திருமணம் நடந்தி வைத்தோம். என் மகளுக்கு பெண் குழந்தை உள்ளது. திருமணத்திற்கு பின் இருவருக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டது. என் மருமகன் என் மகனுடன் படித்தவர் ஆவார். குரூப் ஸ்டடிக்காக என் மருமகன் திருமணத்திற்கு பின்பு அவர் தாயுடன் அடிக்கடி வந்தார். அப்போது இரு குடும்பத்திற்கும் பழக்கம் ஏற்பட்டு என் மகளை கேட்டார்கள். படிப்பு முடிந்தவுடன் என் மகளும் சத்தி பிரனவும் இருகுடும்பத்தாருக்கும் தெரியாமல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு திருமணம் செய்துக்கொண்டார்கள். பெற்றோருடன் பேசியபோது 100 சவரன் தங்க நகையும் மாப்பிள்ளைக்கு 20 சவரன் தங்க நகையும் கேட்டதால் திருமணத்திற்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டோம். சக்தி பிரனவ் தன் தாய் அவரை வளாக்கவில்லை என்றும் அத்தை தான் வளர்த்தார் என்று சொல்லி சக்தி பிரனவ் அவர் அத்தையை அழைத்து வந்து திருப்பதில் திருமணம் நடந்தினார்கள். என் மகளுக்கு 45 சவரனும் மாப்பிள்ளைக்கு 7 சவரன் தங்க நகை போட்டும் திருமணம் நடத்தி வைத்தோம். திருமணத்திற்கு பின்பு சக்தி பிரனவ் அவர் மனைவியை அத்தை வீட்டிற்கு அழைத்துச்சென்றுவிட்டார். திடீரென்று சக்தி பிரனவ் பெற்றோர் எங்கள் வீட்டிற்கு வந்து அக்கம் பக்கத்தினர் முன்பு பிரச்சனை செய்து அசிங்கப்படுத்தினர். 15 நாளைக்கு ஒரு முறை என் மருமகன் என் வீட்டிற்கு இரவு 12.00 மணிக்கு தான் வருவார். பின்னர் என் மகள் குழந்தையை வைத்துக்கொண்டு அழுதுக்கொண்டு இருந்தார். நைட்டு கிழிந்துவிட்டு இருந்தது. என்னவென்று கேட்டபோது என்னையும் என் குழந்தையும் சக்தி பிரனவ் அடித்துவிட்டதாக என் மகள் என்னிடம் சொன்னார். ஏன் அடித்தார் என்று என் மகளை கேட்டேன். பிரேஸ்லட் கேட்டு நான் கொடுக்காததாலும் குழந்தைக்கு செர்லாக் கேட்டு வாங்கி கொடுக்கவில்லை என்பதால் தன்னை அடித்ததாக என் மகள் சொன்னார். சோழவரம் காவல் நிலையத்திற்கு புகார் அளிக்க சென்றபோது தான் என்னை அடித்து நைட்டியை கிழித்ததாக என்னிடம் சொன்னார். பின்னர் நாங்கள் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். தேதி நினைவில்லை. எங்களுக்கு ஒரு விபத்து ஏற்பட்டு அந்த வழக்கு சம்பந்தமாக ஒரு வழக்கறிஞரை பார்க்க சென்றபோது தான் சக்தி பிரனவ் என் மகளை விவகரத்து செய்த விசயம் எனக்கு தெரிய வந்தது. என் மகளுக்கு மேற்படி விவாகரத்து பற்றி தெரியாது. விகாரத்திற்கு பின்னர் சக்தி பிரனவிற்கு திருமணமாகி குழந்தை உள்ளதாக தெரிந்தவர்கள் சொன்னார்கள். த்றபோது என்

மகள் குழந்தையை வைத்துக்கொண்டு என்னுடன் தான் உள்ளார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை-

நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தற்போது சொன்ன விவரங்களை என் மகள் சொல்லித்தான் சொல்கிறேன் என்றால் என் மகளை தாக்கிய விவரத்தை என் மகள் சொல்லித்தான் தெரியும். காயத்தையும் நைட்டு கிழிந்ததையும் பார்த்தேன். என் மகளும் மருமனும் செய்த பதிவு திருணம் இருகுடும்பத்திற்கும் தெரியாது என்றால் சரிதான். சக்தி பிரனவ் என் வீட்டிற்கு எனக்கு தெரிந்து தான் வந்தார். என் மகனுடன் சேர்த்து 3 பேர் குருப் ஸ்டிடி செய்ய வந்தார்கள். திருமணத்திற்கு பின்பு சக்தி பிரனவ் பெற்றோர் வரவில்லை. நாங்கள் நாயூடு சமூகத்தை சேர்ந்தவர். சக்தி பிரனவ் என்ன சமூகத்தை சேர்ந்தவர்கள் என்று தெரியாது. நான் தற்போது சொன்ன விவரத்தை தான் காவல் நிலைய வாக்குமூலத்திலும் அளித்துள்ளேன். என் மகளின் குழந்தை திவிசா கவரபேட்டையில் உள்ள ஆர்எம்கே பள்ளியில் 2ம் வகுப்பு படிக்கிறார். மேற்படி குழந்தையும், என் மகளும் தற்போது என்னுடன் தான் வசித்து வருகிறார்கள். என் மகளுக்கு 2ம் திருமணம் எதுவும் செய்யவில்லை. எதிரி விவாகரத்து வழக்கு உயர்நீதிமன்ற வளாகத்தில் குடும்பநல நீதின்றத்தில் பதிவு செய்தது பற்றி எங்கள் யாருக்கும் தெரியாது. என் மகள் கொளத்துரை சேர்ந்த ஒரு நபரை 2ம் திருமணம் செய்துக்கொண்டார் என்றாலும் அதை மறைத்து நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சக்தி பிரனவ் வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் எங்களுக்கு அவரை பிடிக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் ஜாதியை பார்க்கவில்லை.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் கு.வி ஒத்திவைக்கப்பட்டது)